கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.136/2024

வா.சா.1 - சரஸ்வதி

நாள்.20.01.2026 த/பெ - லிங்கதுரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தானது 5 செண்டு விஸ்தீரணம் ஆகும் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தாத்தா பொன்னுசாமி என்பவர் கிரையம் பெற்ற இடம் என்றால் சரிதான். வழக்கு சொத்து தவிர்த்து எனது தாத்தாவிற்கு சர்வே எண்.2424 ல் ஒரு ஏக்கர் 70 செண்ட் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தில் உள்ள வீட்டில் எனது சகோதரர் 1ம் பிரதிவாதி பொன்செல்வன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் திருமணம் முடிந்து 32 வருடங்கள் இருக்கும். நான் காதல் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 1972 ல் காலமானார் என்றால் சரிதான்.

2) எனது சகோதரி பாக்கியதாய் எந்த ஊரில் திருமணம் முடிந்துள்ளார் என்றால் தோப்பூர் ஆகும். எனது சகோதரி பாக்கியதாய்க்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1977 வருடம் திருமணம் ஆனது. அந்த சமயத்தில் எனது சகோதரர் பொன்செல்வன், வாதிகள் ஆகிய நாங்கள் இருவரும் மற்றும் எங்களுடைய தாயார் பாப்பாத்தி, தாத்தா பொன்னுசாமி ஆகியோர் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது தாயார் வயது மூப்பின் காரணமாக வேலைக்கு செல்வது இல்லை என்றால் சரியல்ல, 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் வேலை பார்த்து வந்தார். எனது தாயாருக்கு எப்போது விபத்து நேரிட்டது என்றால் 2017 ம் ஆண்டு நேரிட்டது. எனது தாயாரின் விபத்து செலவிற்கு 1ம் பிரதிவாதி பொன்செல்வன் தான் செலவு செய்தார் என்றால் சரியல்ல, நான் தான் செலவு செய்தேன்.

3) எனது தாத்தா எனது சகோதரன் பொன்செல்வன் பெயருக்கு 1991 ல் உயில் எழுதி உள்ளார் என்றால் சரிதான், எனது தாத்தா 1994 ல் இரண்டாவது உயில் எழுதினார். 1991



MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.20 15:10:31 +0530

உயிலில் யார் யார் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் மார்த்தாண்ட பூபதி என்பவரும், ராசையா நாடார் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள். 1994 ல் ஆண்டு உயில் ஆவணத்தின் அசல் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை, என் தாயாரின் கைவசம் இருந்தது பின்னர் எனது சகோதரன் கைவசம் இருந்தது. 1994 ம் ஆண்டு உயிலை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் நான் படித்து பார்த்துள்ளேன். 1994 ம் ஆண்டு உயிலை ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை அதனால் தான் உயிலின் 1 ம் தபசில் சொத்து விவரம் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல, தெரியும் உயிலில் எனது தாயாருக்கு 1 செண்டும், மீதமுள்ள 4 செண்டும் பொன்செல்வன், பாக்கியதாய், சரஸ்வதி ஆண்டு அனுபவத்து கொள்ளவேண்டும் என்று உள்ளது. நான் மேற்சொன்ன 5 செண்ட் நிலம் மட்டும் தான் உயிலில் சொத்து விவரம் என்றால் சரிதான். மேற்சொன்ன 5 செண்ட் நிலத்தை தவிர்த்து வேறு எந்த சொத்துக்களும் 1994 ம் ஆண்டு உயிலில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4) எனது தாத்தா 1994 ம் ஆண்டு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.4 உயிலில் 1 ம் தபசிலாக சர்வே எண்.2424 ல் 1 ஏக்கர் 74 செண்ட் பூராவும் என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா 1972 ம் ஆண்டு கிரையம் பெற்ற ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது தாயாருக்கு 1 செண்ட் நிலத்தை பொறுத்து என்னுடைய தாத்தா பொன்னுசாமி உயில் எழுதியதாக குறிப்பிட்டுள்ள சம்மந்தமாக அந்த சொத்துக்குரிய ஆவணங்கள் ஏதாவது நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை. மேற்படி 1 செண்ட் நிலத்திற்கு நான்கு மால் எல்கைகள் தெரியுமா என்றால் கன்னி மூலை எல்கை விவரம் தெரியும், நான்கு மால் எல்கை விவரம் தெரியாது.

( 1, 2 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.01.20 15:10:38 +0530